## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

## CC.No. 134/2019

2026ம் ஆண்டு ஜுன் மாதம் 16ஆம் நாள் செவ்வாய் கிழமை அரசு தரப்பு சாட்சி–03, திரு.வீரச்சந்திரன் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சாஸ்தாகுமரன், மூன்றாம்நிலைஎழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.வீரச்சந்திரன் | வயது | : | 34/26 |
| த.பெ/ க.பெ. | : | தங்கராசு | தொழில் | : | டிரைவர் |
| ஊர் | : | பிராஞ்சேரி | நிலை | : | LW04/ PW03 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

(1, 2 எதிரிகள் ஆஜரில்லை. அவர்கள் தரப்பு வழக்கறிஞரால் மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. 3வது எதிரி ஆஜர்)

**முதல்விசாரணை:**

நான் தற்போது பிராஞ்சேரியில் வசித்து, டிரைவர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். கடந்த 19.07.2017ம் தேதி எங்கள் பக்கத்து வீட்டைச் சேர்ந்த அம்புஜம் என்பவர் இறந்துவிட்டார். அவரது இறுதி சடங்கிற்காக சுடுகாட்டிற்கு சென்றிருந்தபோது, அங்கு அறிவழகனும் ஜனகரும் தகராறு செய்துக்கொண்டார்கள். அதில் அறிவழகன் ஜனகரை தாக்கி, அவருக்கு மண்டை உடைந்ததால் ஜனகரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.**

/ உண்மை நகல்/
ஒம்/–P.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்1,
ஜெயங்கொண்டம்.